அடுத்த 100 ஆண்டுகளில் அழிந்துவிடும் 25 மொழிகளில் 8 வது இடத்தில் தமிழ்மொழி!

தமிழ்ச் சமுதாயம் இதை உணராவிட்டால் நமது வரலாறு மறைக்கப்படும்!

சட்டப்பேரவையில் மயிலை தொகுதி உறுப்பினர் மயிலை த.வேலு பேச்சு!

சென்னை, ஜூன் 28 - அடுத்த 100 ஆண்டுகளில் அழிந்துவிடும் 25 மொழிகளில் நமது தமிழ்மொழி 8 வது இடத்தில் இருக்கிறது. தமிழ்ச் சமுதாயம் இதை உணராவிட்டால் நாம் உயிரற்ற உடலாய் உலா வருவோம். நமது வரலாறு மறைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் மயிலை தொகுதி உறுப்பினர் மயிலை த.வேலு பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் நீதி நிர்வாகம் மற்றும் சட்டத்துறை, செய்தி மற்றும் விளம்பரம், தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் உறுப்பினர் மயிலை த.வேலு பேசியதாவது:

எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு என்ற முழுக்கத்துடன், பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம்.

எப்பொழுதெல்லாம் சர்வாதிகாரம் தலைதூக்க முனைகிறதோ, அப்பொழுதெல்லாம் கம்பீரமாக எழுந்து நின்று, அதை வீழ்த்தும் இயக்கம் தி.மு.க. என்பதை நிரூபிக்கும் வகையில், இந்தத் தேர்தலில் 40க்கு 40ஐ வென்றெடுத்து, ஜனநாயகத்திற்கு அரணாய் விளங்கி கொண்டிருக்கிற தமிழக முதல்வர் அவர்களுக்கும், இயக்கத்தின் எதிர்காலம் மற்றும் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்ட அமைச்சர் உதயநிதி அவர்களுக்கும், அவையின் முன்ன வருக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும் எனது அன்பு கலந்த தமிழ் வணக்கம்.

தமிழர்களின் நெஞ்சங்களில் எல்லாம் தமிழாய் நிறைந்திருக்கின்ற கலைஞரின் நூற்றாண்டு நிறைவு ஆண்டில் தமிழைப் பற்றி இந்த அவையிலே பேச வேண்டுமென்று சொன்னேன். அதற்கு ஒப்புதல் தந்து வரலாற்று சிறப்பு மிக்க இந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தந்த கழகத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவருக்கும், கொறடா அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நேரத்தின் அருமை கருதி சுருக்கமாகவும், அதேநேரத்தில் இறுக்கமாகவும் என் உரையை பதிவு செய்ய விரும்புகிறேன். சுருக்கமாகச் சொன்னால், இன்று நடைபெறுகின்ற மானியக் கோரிக்கைகளில் நீதித் துறை, சிறை துறை, எழுதுபொருள் துறை, செய்தி மற்றும் விளம்பர துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் இருந்தாலும், நான் தமிழ் வளர்ச்சி துறையில் பேச விரும்புகிறேன். காரணம் இந்த ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டை, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றிட வேண்டுமென்று என்ற எண்ணத்தோடு, அனைத்துத் துறைகளிலும் முன்மாதிரியான திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி கொண்டிருக்கிறார். துறைகள் ரீதியான வளர்ச்சி என்பது, சமுதாயம், கட்டமைப்பு, வாழ்வியல் உயர்வு. ஆனால், மொழி வளர்ச்சி என்பது என்னதான் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தினாலும், அது ஒரு மாயையாகத்தான் தோன்றுகிறது. காரணம் மொழி என்பது உணர்வுகள் சம்பந்தப்பட்டது. ஒவ்வொரு மனிதனின் உணர்விலே மொழி கலந்தால்தான், அதன் வளர்ச்சியைக் காண முடியும். இது அரசின் கடமை அல்ல; ஒவ்வொரு மனிதனின் கடமை. தமிழ் வளர்ச்சித் துறை தமிழுக்கு மிகப் பெரிய வெளிச்சமாக இருந்தாலும், விளக்கிற்கு ஒரு தூண்டுகோலாய் சில ஆலோசனைகளை நான் இங்கே முன்வைக்கிறேன். இந்த விஞ்ஞான உலகத்தில் வரும் தலைமுறைகள் எல்லாம் செயற்கை நுண்ணறிவு *Artificial Intelligence* தளத்தை நோக்கி செல்கிறது.

தமிழினத்தின் அடையாளமாக குமரியில் வானுயர திருவள்ளுவர் சிலை அமைத்த தலைவருக்காக கேட்கிறேன். அங்கே கலைஞருக்கு ஒரு சிலை அமைக்க வேண்டும். காரணம் உலகம் உள்ளவரை அங்கே திருவள்ளுவர் இருப்பார். திருவள்ளுவர் உள்ள வரை அங்கே முத்தமிழறிஞர் கலைஞர் இருப்பார். கலைஞரின் அந்த சிலை இருக்கும்வரை, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற பெயர் என்றும் இருக்கும் என்று சொல்லி எனது தொகுதி கோரிக்கைகள் சிலவற்றை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

எனது தொகுதியில் கேட்டதெல்லாம் கிடைத்திருக்கிறது. அதற்கு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது உள்ள முக்கியம் வாய்ந்த தேவைகள் சிலவற்றை இங்கே வேண்டுகோள்களாக வைக்கிறேன். மழைக் காலங்கள் வரும் பொழுதெல்லாம், தொகுதியில் உள்ள சில பகுதிகளில் 3 நாட்களுக்குமேல் தண்ணீர் தேங்குவதை தடுக்க, தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டது. அது பலனை தந்தாலும் *Buckingham canal* எனது தொகுதியிலே கிட்டதட்ட மூன்று கிலோ மீட்டருக்குமேல் இருக்கிறது. அந்த ஆற்றில் சென்று கலக்கும்போது, தூர் வாராத காரணத்தால் கால்வாயும் *B canal*ம் இணைக்கின்ற இடத்தில் சமநிலை உள்ளதால், மழைநீர் உள்வாங்காமல் தெருக்களில் படகுவிடும் அளவிற்கு நீர் தேங்கு கிறது. ஆகவே, அதைச் சீர் செய்யும் பொருட்டு, ஒரு மீட்டர் அளவுக்கு மண் சேர்ந்துள்ளதால், அவற்றை உடனடியாக தூர்வார வேண்டும் என்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். காரணம் தூர் வாரினால் ஒரு மீட்டர் மழை தண்ணீர் தூர்வாரப்பட்ட *Buckingham canal*ல் சென்றடைந்தால், ஊருக்குள் உள்ள தண்ணீர் கால்வாயில் தேங்கும். இதனால்தான், ஊருக்குள் தண்ணீர் தேங்குகிறது. ஆகவே, இதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிங்காரவேலர் சிலை அமைப்பீர்!

சாந்தோம் லூப் சாலைக்கும் அந்தப் பகுதியில் புதிதாக அமையவுள்ள மீன் அங்காடிக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்றும், அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களின் வேண்டுகோளை ஏற்று, சிங்காரவேலர் சிலையை நொச்சிக்குப்பம் மீனவர்கள் வாழும் பகுதியில் அமைக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரையுள்ள அனைத்து சமுதாய ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஒதுக்கும் வீடுகளுக்கு 1.5 இலட்சம் ரூபாய் நிர்ணயித்து, மாதத் தவணையில் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கோயில்கள் நிறைந்த என்னுடைய மயிலை சட்டமன்றத் தொகுதியில், கோயில் வீடுகளின் வாடகை நிர்ணயத் தொகையைக் குறைத்து, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டும்' என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இறுக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1967ல் இந்த அவை எப்படிப்பட்ட ஓர் இன, மொழி உணர்வோடு நிரம்பி காட்சியளித்ததோ, அந்த எண்ணத்தில், இன்னும் பல ஆண்டுகள் இந்த உணர்வோடு திகழ வேண்டுமென்ற எண்ணத்தோடு முத்தமிழறிஞரின் தமிழுக்காக, நாம் உயிராய் மதிக்கின்ற தமிழுக்காக கூடுதலாக நேரம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்று சேர்ந்து காப்போம்!

தமிழ் வளர்ச்சித் துறை என்று சொல்வதைவிட தமிழ் வளர்ச்சி மற்றும் பாதுகாப்புத் துறை என்றுதான் இனி நாம் சொல்ல வேண்டும். ஏனென்றால், வளர்ச்சி என்பது ஆட்சி அதிகாரத்தின்மூலம் மட்டும்தான் செய்ய முடியும். பாதுகாப்பு என்பது யார் ஆட்சி செய்தாலும் சமூகம் ஒன்றுகூடி கட்சிப் பாகுபாடில்லாமல் காக்க வேண்டியது. ஒன்றை மட்டும் நான் இங்கே ஆணித்தரமாகப் பதிவிடுகிறேன். என்றைக்கெல்லாம் தி.மு.க. ஆட்சி அதிகாரத்தில் வருகிறதோ, அன்றைக்கெல்லாம் தமிழும், தமிழினமும், தமிழ் உணர்வாளர்களும், தமிழ் அறிஞர்களும் கம்பீரமாக தலைநிமிர்ந்து நிற்பார்கள். அதற்கு எடுத்துக்காட்டுத்தான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியின் அகழ்வாராய்ச்சிகள், விருதுகள், உதவிகள், மாணவர்கள் பயிலும் தமிழுக்கு தனிக்கவனம் இவையெல்லாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இது மட்டும் போதாது. ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமும் ஒன்று சேர்ந்து காப்பாற்றக்கூடிய நிலையில் இன்று தமிழ் இருக்கிறது. காரணம், மக்கள் மனதிலே தமிழ் என்பது நமது மொழிதான். அதன் அருமை, பெருமையெல்லாம் சரிதான். ஆனால், அது இன்றைய நமது வாழ்வியலுக்குப் பயன்படாது என்பன போன்ற கருத்துகள் மக்கள் மனதிலே தொடர்ந்து விதைக்கப்பட்டு, அவை இன்றைக்கு பெரும்பாலானோரின் மனங்களில் ஆழமாக வேரூன்றி, அகலகிளை விரித்து பரவியிருக்கிறது.

மொழியைப் பயன்படுத்தாத நிலை, வேக, வேகமாக வேற்று மொழிச் சொற்கள் கலப்பட நிலை போன்ற அளவுகோள்களின் அடிப்படையில், அடுத்த 100 ஆண்டுகளில் அழிந்துவிடும் 25 மொழிகளில், தமிழ் மொழி 8வது இடத்தில் உள்ளது என்று ஓர் ஆய்வு கூறுகிறது என்றால், தமிழ் நெஞ்சங்களே இதை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இதை உணராமல் விட்டு விட்டால் தமிழ் சமுதாயம் உயிரற்ற உடலாய் மட்டும் இந்த நாட்டிலே உலா வரும். வரலாறு மறைக்கப்படும், மறக்கடிக்கப்படும்.

மொழி உயர்ந்தால் சமுதாயம் உயரும்!

பல நூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த இனத்தை நீ ஆண்ட இனம் என்று தமிழ் வரலாற்றை நமக்கெல்லாம் தனித் தமிழ் எழுத்தால், பேச்சால், நம்முள் இருக்கும் உணர்வுகளைத் தட்டி எழுப்பி, இந்த அவையிலே 1967ல் அதிகாரத்துடன் அமர வைத்து, 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டி தமிழனுக்கென்று ஒரு தனித்தன்மையை இந்த இந்தியாவிலேயே உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைத் தொடர்ந்து ஒரு மொழி உயர்ந்தால் அந்தச் சமுதாயம் உயரும் என்ற உணர்வோடு தமிழுக்காக, தமிழின் வளர்ச்சிக்காக தன் வாழ்நாள்வரை உழைத்திட்டவர் செம்மொழி நாயகர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்று இனத்தையும், மொழியையும் மேலும் பலப்படுத்த அகழ்வாராய்ச்சிகளையும், மொழி அறிஞர்களையும், தமிழுக்கான வளர்ச்சிப் பணிகளையும் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உயர்த்திக் கொண்டிருப்பவர் நம் முதலமைச்சர் அவர்கள் என்பதை துறை அமைச்சர் அவர்களின் கொள்கை விளக்கக் குறிப்புகள் எடுத்துக்காட்டுகிறது.

சற்று எண்ணிப்பாருங்கள். ஒரு நாட்டின் இனத்தை, வரலாற்றை அழிக்க வேண்டுமென்று சொன்னால், அந்த மொழியை அழித்தால் போதும் என்ற காலக்கட்டம். தமிழ்த்தாய் வாழ்த்துக்குக்கூட தடங்கல் வரும் சூழ்நிலை. இப்படிப்பட்ட இந்த நிலையில்தான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். மொழி உணர்வு இருக்கும்வரைதான் நம் மொழி ஆளும். இல்லையென்றால், வேறு மொழி சொல்வதைக் கேட்டு நம் மொழி ஆளும். இந்த நிலை வரவே கூடாது, சிந்திப்போம். கொள்கைகள் வேறாக இருக்கலாம். ஆனால், மொழி உணர்வு ஒன்றாக இருக்க வேண்டும்.

மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா போன்ற தென்மாநிலங்களில் எல்லாம் மொழி உணர்வு தேய்ந்தது. அதனால் என்ன நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். ஆட்சி இருக்கும்; ஆனால், அதிகாரம் எங்கேயோ இருக்கும். ஆட்சியும், அதிகாரமும் நம் மக்களுக்காக அவர்களின் உயர்வுக்காக நமக்கு நாமே சிந்தித்து செயல்படுத்தவேண்டுமென்றால், நாம் நம் மொழியை பாதுகாத்திட வேண்டும். தமிழ்மொழி என்பது சமூகத்தின் ஓர் அங்கம். மொழி இல்லாமல் சமூகம் இல்லை. சமூகம் இயங்க, கட்டமைக்க மொழி வேண்டும். ஆகவே, இரவல் வாங்காத இலக்கணமாய்த் திகழ்கின்ற தமிழ் மொழியை அழிந்து போகாமல் காப்பது நம் கடமை. தமிழைப் பொறுத்தவரை நாம் ஒத்த கருத்துடையவர்களாக இருப்போம். இந்த அவையிலே ஆன்மீக வளர்ச்சிக்கு ஆயிரம் கேள்விகள் கேட்கும் நாம் தமிழ் வளர்ச்சிக்குக் கேட்டிருக்கிறோம் என்றால் அது ஒரு கேள்விக்குறிதான். இங்கு கடைக்கோடி கிராமத்திலிருந்து வரும் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் நகரமயமாகிய ஊர்கள் வரையில் இருந்து மக்கள் பிரதிநிதிகளாக வந்திருக்கிறோம்.

தமிழுக்குச் செய்த சிறிய தொண்டு!

இந்த 5 வருடத்தில் தமிழுக்காக ஏதாவது ஒரு வகையில் ஒரு செயலைச் செய்வோம் என்ற உணர்வுடன் செயல்படுவோம் என்று சொன்னால், நான் இங்கே வந்து கன்னிப்பேச்சிலே தமிழ்த்தாய் வாழ்த்து அனைத்துப் பள்ளிகளிலும் பாடவேண்டுமென்று கேட்டேன். நடந்தது; அதேபோல, திருவள்ளுவர் தமிழ் இனத்தின் அடையாளமாகத் திகழ்கின்ற அந்த வள்ளுவர் மகான் பிறந்த ஊர் என்று நம்பப்படுகின்ற மயிலாப்பூர் பகுதியிலே அவருடைய திருக்கோயில் திருப்பணி செய்யவேண்டுமென்று கேட்டேன். அதற்கும் இன்றைக்கு ஆயத்தப் பணிகள் தொடங்கிவிட்டது. அதேபோல, +2 மாணவர்கள் தமிழிலே நூற்றுக்கு நூறு எடுத்தவர்கள் இன்றைக்கு அரசாங்கத்தால் மரியாதை செலுத்தப்படவேண்டும் என்று சொன்னதற்கு, அதுவும் நடந்தது.

கலைஞரின் தூக்குமேடை வசனம்!

ஆகவே, நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழைப்பற்றிய வளர்ச்சிக்கு சிந்தித்து செயல்படவேண்டுமென்று கேட்டு, தமிழின் பெருமைகளைப் பேச தமிழின் வரலாற்றைப் பேச, தமிழினத்தின் வீரத்தைப் பேச ஒருநாள் போதாது. இருந்தாலும் உங்கள் மொழி உணர்வில் ஏதோ ஒரு வகையில் சிந்திக்க இந்தச் சிறிய நேரத்தில், சிறிய இடத்தைப் பிடித்திருந்தால், அதுவே நான் தமிழுக்குச் செய்த சிறிய தொண்டு என்று எண்ணிப் பெருமையடைவேன் என்று சொல்லி, இறுதியாக, 1938வது ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போரில் வில், கயல், புலி என்ற மூன்றையும் தாங்கிய தமிழ்க் கொடி ஏந்திய அதே கலைஞர்தான் கழகத்தின் சார்பில் அண்ணா தந்த கொடியையும் தாங்கி நடைபோடுகிற காலத்தில், தன்னுடைய பேச்சால், மூச்சால், எழுத்தால், செயலால், நிர்வாகத் திறனால், எத்துறையில் புகுந்தாலும் அத்துறையிலும் தன் முத்திரையைப் பதிக்கின்ற கலைஞராக விளங்கிய முத்தமிழ் கலைஞர் அவர்களின் "தூக்குமேடை" நாடகத்தில் வரும் ஒரு வசனத்தை இங்கே நான் நினைவூட்டி முடிக்கிறேன்.

"இது கீழே போடுகிற கொடி அல்ல; சாதி வேருக்கு சமாதி கட்டி, அதன் பக்கத்திலே எழுப்பப்படும் சுயமரியாதை மாளிகையின் உச்சியிலே பறக்க விடுகிற கொடி. தமிழ் மொழியைக் காப்பதற்கு 8 பேரும், தமிழினம் காப்பதற்கு 7 பேரும், தங்கள் தேக்குமரத் தேகங்களைத் தீயின் நாக்குகளுக்கு அரிப்பணித்தார்களே, அவர்களின் கைகளில் ஏந்திய கொடியடா இது! ஏமாற்றப்பட்டவர்களாக, எலும்புக்கூடுகளாக, நாயினும் கேவலமாக, சாக்கடையிலே நெளியும் புழுக்களிலும் கேவலமாக, சாத்திரக் குப்பை மேடுகளிலே தூசி துரும்புகளாய்த் தூக்கி எறியப்பட்ட மக்களை, மார்பினை உயர்த்தி பீடுநடை போடச்செய்ய, ஏடு கொள்ளாப் புகழ்பெற்றத்த, எங்கள் அண்ணன் வழங்கிய கொடியடா" என்று மிடுக்கோடு கூறிய கலைஞர் அவர்களுடைய வரிகளோடு முடித்து, இன்னும் சொல்லலாம் விரிவாக, இருந்தாலும் முடித்தேன் நிறைவாக என்று கூறி, (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய சூளுரையோடு இதனை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு மயிலை த.வேலு பேசினார்.

நடைபெற உள்ள விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணிக்கு ஒதுக்கப்பட்ட மேலக்கொந்தகை ஊராட்சி பாகம் எண் 238 வரிசை எண் 453முதல் 603 வரையிலான வாக்காளர் விவரங்களை குடும்ப வாரியாகவும் மற்றும் வாக்காளர்களின் கட்சி சார்பாகவும் பிரித்து அதனை முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏயிடம் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாவட்ட துணை செயலாளர் வெங்கல் வி.ஜெ.சீனிவாசன் ஆகியோர் வழங்கினார்கள் அருகில் ஆவடி மேற்கு ஒன்றிய செயலாளர் பொன்.விஜயன் உள்பட பலர் உள்ளனர்.

நெம்மேலியில் கடல் நீரை,

குடிநீராக்கும் திட்டத்தில் பராமரிப்பு பணி!

குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 28- நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் பிரதான குழாயில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் 30.06.2024 அன்று காலை 9 மணி முதல் 01.07.2024 அன்று காலை 9 மணி வரை (1 நாள் மட்டும்) குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, போதுமான அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (*Dial for Water*) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் *https://cmwssb.tn.gov.in/* என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 0444567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி பாகம் 136. நரசிங்கனூர் பகுதி விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்துக்கு சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் என், சந்திரன், பகுதி செயலாளர் ப,குணாளன், ஒன்றிய செயலாளர் ஜி.கே. ரவி, நகர செயலாளர் பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஆகியோர் வாக்குகள் சேகரித்தனர். புருஷோத்தமன், தேன்மொழி, கிளைச் செயலாளர், ஆல்பர்ட், ஜீவா, மற்றும் சாலமன் எம்.சி., முரளி கிருஷ்ணன், ஏசுதாஸ், ஜெகதீஸ்வரன், வேலவன், மாறன், ஸ்டீபன், சிட்ரிக் ஜான், ஜெயக்குமார், பிரான்சிஸ், ரமணன் , விக்கி, ஸ்ரீதர் ,குமார், உதயகுமார், கருணாகரன், அப்துல் காதர், ரூபன், ஜெகன், சூர்யா, சபரி, வினோத், செந்தில், மதிவாணன், ஆரோக்கியம், ஷெரிப், இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பழ. சுப்பையா

ஜூன் 28 (2022)

இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கிளைச் செயலாளர், ஊராட்சி செயலாளர், இரண்டு முறை அறந்தாங்கி ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட இலக்கிய அணி பொருளாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இடையாத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.